

# குருதேவர்

இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை
அறிக்கை எண்: 42 முதல் 48 முடிய

## பயிலுதலும் பயிற்றுவித்தலும்



[அட்டைப்பட விளக்கம் மூன்றாம் பக்கத்தில்]

வெளியீடு: 26—12—88 காணிக்கை: ரூ 2-50

காணிக்கை ரூபாய் 36-00 செலுத்தி
**1988-ஆம் ஆண்டுச் சந்தாதாரராகச் சேருங்கள்**

# தமிழ் எழுத்தின் வரிவடிவங்கள்

தமிழ் எழுத்தின் வரிவடிவங்கள் காலப்போக்கில் பல மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன. ஆனால், இன்றுள்ள எழுத்துக்களின் **'அடிப்படை வடிவங்கள்'** அல்லது **'மூலவடிவங்கள்'** ......அப்படியேதான் இருக்கின்றன. அவை, அருளை ஊற்றெடுக்கச் செய்யும் சக்கரங்களே (The divine powered forms or physical structures) யாகும். எனவேதான், தமிழ் எழுத்துக்களை நீர்மேல், மண் மேல், மணல் மேல், உப்பின் மேல், பயிரினப்பாகங்களின் மேல், (இலை, காய், பூ. விதை, தண்டு, வேர்......) உயிரினப்பாகங்களின் மேல்.,........எழுதி உருப்போட்டால் (Enchanting the Sacred Verses) அல்லது உச்சாடனம் செய்தால்.........அருளாற்றல் ஊற்றெடுக்கும். அப்படி ஊற்றெடுக்கின்ற அருளாற்றலை தனிமனிதர்கள் தங்களின் உடலில் குறிப்பிட்ட அளவு தேக்கி வைத்துக் கொண்டிருப்பார்கள் அல்லது பூசையில் வைக்கப்படும் பொருள்களில் அருளாற்றல் தங்குமாறு செய்வார்கள். அப்பொருள்களையே பிறருக்குத் தேவையான அருட்பாதுகாப்பும் நலமும் வழங்கப் பயன்படுத்துவார்கள்.

இப்படித் தமிழ் எழுத்துக்கள், அருளணுக்களை ஒன்று திரட்டி மனிதவாழ்வுக்குப் பயனுள்ளதாகச் செய்யும் அருளாற்றலுடையனவாக இருக்கின்றன. இதனைக் குருபாரம்பரியம்''......அருட்கேணிகளைத் தோற்றுவித்த பதினெண் சித்தர்கள்; அக்கேணிகளிலிருந்து அருள்நீரை இறைப்பதற்காக வழங்கிய தோண்டிகளே தமிழ் எழுத்துக்கள். அண்டபேரண்டப் பெருவெளிகளிலும் இம் மண்ணுலகிலும் அருளணுக்கள் நிலத்தடி நீர் போல் நிறைந்துள்ளன. இந்தத் தெய்வத் தமிழ் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டே; இம்மண்ணுலகில் தோன்றும் மனித இனங்களின் ஆற்றலுக்கும் சூழல்களின் வளவாய்ப்புகளுக்கும் ஏற்ப 'புதிய புதிய வடிவுடைய எழுத்துக்களைப் படைத்தார்கள். எனவே, பதினெண் சித்தர்கள் படைத்த எழுத்துக்களனைத்துமே அருளாற்றலை வழங்கும் தரமும் திறமும் உடையவையே...'' என்ற வாசகத்தால் குறிக்கின்றது இதனால் மொழி வெறியோ, ஆதிக்கமோ இல்லாத சமத்துவநிலையே சித்தர் நெறி (இந்துமதம்) யின் கொள்கை என்ற பேருண்மை விளங்குகின்றது.

எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரால் தமிழ்க் கொலைகள் நிகழுவதைத் தடுத்தேயாக வேண்டும் புதிய எழுத்துக்கள் (சமசுக்கிருத மொழியின் ஷ. ஜ. ஹ.) தேவையென்றெண்ணிப் பிற மொழிச் சொற்களின் எழுத்துக்களைத் தமிழில் பயன்படுத்துவது தற்கொலைக்குச் சமமாகும் அது அருளுலகை இருளடையச் செய்துவிடும். தமிழ்மொழியில் உள்ள வட ஆரிய மொழிக் கூறுகளை அகற்றுவதே தமிழர்களை வட ஆரிய மாயைகளில்இருந்து விடுவிக்கும் பணியாகும் அறிவுப்பூர்வமான விளக்கங்களை வழங்கித் தமிழ்மொழிச் சொற்களைத் தூய்மைப் படுத்தி, வாய்மைப்படுத்தி மெய்ம்மைப் படுத்துவதுதான் தமிழர்களின் அக இருள்களையும், புற இருள்களையும் அகற்றும் பணியாகும் தமிழ் மொழியே தமிழினத்தின் உயிர்நாடி. தமிழே பட்டுப் போனதையும் துளிர்க்கச் செய்யும் அரிய மருந்து வட ஆரியர்கள் தங்களுடைய செல்வாக்கிழந்த சமசுக்கிருத மொழியை எந்நேரமும் புகழ்ந்து கொண்டாடி ஆட்சிப்பெறச் செய்ய முயற்சிப்பது போல; ஒவ்வொரு தமிழனும் தன்னுடைய மூச்சையும் பேச்சையும் தமிழ்மொழியைப் புகழ்வதிலும், ஆட்சி மீட்சி பெறச் செய்வதிலும்தான் செலவிட வேண்டும்........இப்படிப்பட்ட முயற்சிகள்தான் தமிழ்மொழியைச் சிறப்புக்குள்ளாக்கிடும்.



— பதினெண் சித்தர் பீடம்
பதினெண் சித்தர் மடம்



1988-ஆம் ஆண்டிற்கான சந்தா ரூ 36-00 அனுப்பவும்



# பயிலுதலும் பயிற்றுவித்தலும், ஓதுதலும் ஓதுவித்தலும், கற்றலும் கற்பித்தலும்

நேமம் நியமம் நிடதம் நிட்டை நீதி எனும் ஐந்தின் செயல் நிலை விளக்கமே இத்தோற்றம். இத்தோற்றத்தில் வலது கையின் ஐந்துவிரல்களும் விரித்து வாழ்த்தப் படும். கீழே இடது கையின் ஐந்து விரல்களும் சத்தியைப் பெறுவதற்கு நாபிக் கமலத்தில் வைத்திருக்க வேண்டும். இந்நிலையில் நேமம் நியமம் நிடதம் நிட்டை நீதி என்பவை ஐந்து விரல்களைப் போல் பயிலவும் பயிற்றுவிக்கவும்படும். இத் தோற்றத்தில், ஆண்மைநிலை தேவையென்பதால் வலதுகால் மேலேயிருக்கும்; மார்பு, கண்டம் (கழுத்து), முகம் ஆகிய மூன்றிடங்களிலும் ஞானஒளி வெளிப்பட்டிடும்; தேவாதிதேவர்களும், மூவாதிமூவர்களும், முற்றும்கற்றவர்களும், முழுதும் உணர்ந் தவர்களும், முப்பது மூவாயிரங்கோடி தேவர்களும், ஆயிரங்கோடி தேவதைகளும், நாற்பத்தெட்டாயிரம் கோடி இருடிகளும், தொண்ணூற்றாயிரம் கோடி கணங்களும் நூற்றெட்டாயிரம் கோடி முனிவர்களும் மாணாக்கராயிருந்து அனைத்தையும் ஓதாமல் உணர்வார்கள் என்பதே மரபு. இப்படி இம்மண்ணுலகில் 48 பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றி அனைவருக்கும் அனைத்தையும் உணர்த்திய பிறகே உருவ -மாய், அருவமாய், அருவுருவமாய் இருக்கக் கூடிய இம் மண்ணுலகம் முழுமையை -யும், நிறைவையும் அடைந்திடும். இப் படத்தில் இப்போது பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் தமது நாளோலக்கத் திருவோலக்க நிலைகளிலிருந்து நேமநியம நிடதநிட்டை நீதிகளைப் பயிலுதலையும் பயிற்றுவித்தலையும் செய்கிறார் இதே போல் தொழுகை முறையில் (முழங்காலிட்டு) தவக்கோல நிலைகளிலிருந்து ஆரணம் ஆகமம் மீமாம்சை என்ற மூன்றினையும் சுருதிவழியாக ஓதுதலும், ஓதுவித்தலும் செய்தல் மரபு. இதேபோல் ஆன்மீக உலகின் (அ) அருளுலகின் (அ) மதத்துறையின் உயிர்நாடியான சூத்தரம் சூத்திறம் சூத்திரம் என்ற மூன்றினையும் தவக்கோல நிலை -யிலிருந்து கற்றலும் கற்பித்தலும் மரபு. எனவே, அடுத்தடுத்து ஓதுதலும் ஓது -வித்தலும் எனும் தொழுகை முறைத் தவக்கோலப் படமும், கற்றலும் கற்பித்தலும் எனும் தவக்கோலப் படமும் வெளிவர இருக்கின்றன.

இந்த ஆறு படங்களும் (ஏற்கனவே 3 படங்கள் வெளியிடப்பட்டுவிட்டன) விளக்குகின்றவைதான் பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியெனும் சீவநெறியான மெய்யான இந்து மதத்தின் அடிப்படை ஆதாரங்கள், உயிர் நிலை ஆதாரங்கள், உள்ளீட்டு ஆதாரங்கள், முடிவு நிலை ஆதாரங்கள். இந்த ஆறுபடங்களும் (நிலைகளும்) ஓகாசன நிலைக்குரியவை. இவை அருவுருவமாக உள்ள ஆவி ஆன்மா ஆருயிர் என்ற மூன்றுக்கும் தொடர்புடையவை; இம் மூன்றை -யும் இயக்குபவை; இந்த மூன்றையும் பயிற்சி முயற்சி தேர்ச்சிகளில் ஈடுபடுத்துபவை எனவேதான், இந்த ஓகாசனக்கலைகளில் வல்லவர்களால்தான் ஓமம், ஓகம் யாகம், யக்ஞம், வேள்வி எனும் ஐந்தீவேட்டலில் தேர்ச்சி பெற முடியும் என்ற நியதியும் நீதியும் நிலைத்து நிற்கின்றன. [யோகாசனக்கலைகள் என்பவை உடம்பை மட்டும் பதப்படுத்தக் கூடியவை. அவை போர்க்கலைக்குரிய உடம்பைத் தயாரிக்கும். ஆச்சாரியார்கள் என்பவர்கள் யோகாசனக்கலைகள் மட்டுமே கற்றவர்கள். ஆச்சாறி யார்கள் என்பவர்கள் ஓகாசன யோகாசனக் கலைகள் இரண்டையும் கற்றவர்கள்]

---

1988-ஆம் ஆண்டிற்கான சந்தா ரூ 36-00 அனுப்பவும்

அதாவது பதினெண் சித்தர் பீடாதிபதிகளாலும், அவர்களுடைய விந்துவழிவாரிசுகளாலும் மட்டுமே இந்த ஒகாசன யோகாசனக் கலைகளைக் கற்கவும் கற்பிக்கவும், பயிலவும் பயிற்றுவிக்கவும்முடியும். இவற்றை, இந்தப் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதிதான் அருட்கொடை வள்ளல் என்பதற்கேற்ப இப்படி வெட்ட வெளிச்சமாக ஓவியக் காட்சியாக (Photo) பொதுமக்களுக்கு விளக்கியுரைக்கின்றார். ஆனால், நமது மக்கள் தெரிந்தும் தெரியாதவர்களாக, அறிந்தும் அறியாதவர்களாக, புரிந்தும் புரியாதவர்களாக, தெளிந்தும் தெளியாதவர்களாக, உணர்ந்தும் உணரா தவர்களாக, நம்பியும் நம்பாதவர்களாக வாழ்ந்தே அருட்பயன்களைப் பெறாமல் போய் விடுகிறார்கள். இதற்குக் காரணம் அருளுலகில் எத்தனையோ கூலிநிலைகளும், காலி நிலைகளும், போலிநிலைகளும், வேலிநிலைகளும், ஏமாற்றுநிலைகளும், வாழையடி வாழையாகத் தொடர்ந்து நீடித்து வருவதுதான். எனவே, வையக மாந்தீர்! விண்ணையும் மண்ணையும் இணைக்கும் இந்த இராசிவட்ட நிறைவுடையார் காலத்திலாவது உங்களின் ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றினையும் இணைத்து பிறவாப் பெருநிலை பெற வாருங்கள்! வாருங்கள்! வாருங்கள்!

(முற்றும்)

---

11-ஆம் பக்க தொடர்ச்சி]

தமிழ்நாட்டுத் தலைவர்களைப் பற்றிய ஆராய்ச்சியால் தேவையில்லாத தனிமனித விமர்சனங்களும், பகைகளும், போராட்டங்களும், குழப்பங்களும், தமிழ்நாட்டில் வளர்ந்துவிடக் கூடாது!; வளர்க்கப்பட்டுவிடவும் கூடாது!! அதாவது, தலைவர்களைப் பற்றிய ஆராய்ச்சியால்; புதிய தலைவர்கள் உருவாவதற்கு வழி செய்ய வேண்டும்! அல்லது, புதிய தலைவர்களை உருவாக்கும் வல்லவர்களையும் சூழல்களையுமாவது உருவாக்க வேண்டும்!! அல்லது, பொதுமக்கள் போலித்தலைவர்களை நம்பி ஏமாறுவதாவது தடுக்கப் பட்டிடல் வேண்டும். எனவே, தமிழினத் தாழ்ச்சி நிலை தொடராமல் தடுக்கப்படல் வேண்டும்; விரைவில் இந்நிலை முழுமையாக அகற்றப்பட்டிடல் வேண்டும்; இதற்குத் தாயகத்தின் பாரம்பரியத் தத்துவங்களின் வாரிசுகள் தலைவர்களாகிடல் வேண்டும்; தமிழினச் சித்தாந்தத்தைச் செயலாக்கும் புதிய இயக்கம் தேவை! கழகம் தேவை! கட்சி தேவை! எனவே, இவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய சிந்தனைகளையும் செயல் திட்டங்களையும் உருவாக்குவோமாக!

வெற்றி நமதே! வெல்க தமிழினம்! வளப்படுத்துவோம் தமிழை!
ஆட்சி மீட்சி பெறச் செய்வோம் தமிழினத்தை

**தமிழின மொழி விடுதலை இயக்கச் சிங்கங்கள்**

---

**''பதினெண் சித்தர் மடம் தமிழர் வாழ்வியல் விழாக்களில் பங்கு பெறலே எழுச்சிக்கு வழி''**

---

# குருதேவர் அறிக்கை பற்றிய அறிவிப்பு

**போதிய அளவு சந்தாதாரர்கள் இல்லாத காரணத்தினால்; இந்த அறிக்கையோடு 1987 ஆம் ஆண்டிற்கான மீதமுள்ள குருதேவர் அறிக்கைகள் ஆறும் (43 முதல் 48 முடிய) நிறைவு பெறுகின்றன.**

---

1988-ஆம் ஆண்டிற்கான சந்தா ரூ 36-00 அனுப்பவும்

## அன்புள்ள சேவகனுக்கு.......!

# யார் வேண்டுமானாலும் பதினெண் சித்தர் பீடத்தின் வாரிசாகலாம்!

# பதினெண் சித்தர் பீடத்தின் வாரிசுகள் யாராகவும் மாறலாம்!

அன்புச் சேவக!

(1) நமது இயக்க முதுபெரும் செயல் வீரர் Dr. S. R. நீலமேகம் பிள்ளை இறப்புக்கு மட்டுமே நம்மவர்கள் சென்றுள்ளார்கள். அதுவும், அனைவரும்; இவர் 'இறைமை' [இறைவன்] நிலையை எய்தியுள்ளவர்; அனைவருமே சித்தி பூசை செய்து கொள்ள வேண்டிய ஆலவாய் மாமூதூர் மதுரைச் சுடலையில் நிலையாக அருவுருவ அருளாட்சி அமைப்புப் பணியாளர்களில் ஒருவராக இருந்திடும் பேறு பெற்றவர்; இச்சுடலையின் பத்தரகாளி, பத்திரகாளி, பத்திறகாளி, ஈசுவரி, ஆண்டிச்சி எனும் அனைவராலும் மதித்து ஏற்றுக் கொள்ளப்பட்டவர்; இ.ம.இ.யின் மூலவரான கருவூரர் வழிவந்த கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப்பிள்ளையின் வழி வந்தவர்; நமது இயக்கத்தில் 'பெரியவர்' என்று போற்றப் பட்டவர்.. ...... என்று தெரிந்து புரிந்திருந்தும் யாருமே மறுநாள் பால்தெளியலுக்குச் செல்லவில்லை!!!

(2) அருளுலகில் சித்திகளைப் பெறுவதற்காக மிக மிகப் பெரிய அரிய உயரிய பூசைகளையெல்லாம் செய்து கொண்டவர்கள் மிகுதியாக உள்ள அருளாட்சித் திரு நகரில்; வட்டாரத்தில்; மாவட்டத்தில்......இப்படியோர்; ''ஏனோ! தானோ?'' நிலைக குரிய நிகழ்ச்சி நடந்து விட்டது!!!.........இதை, என்னவென்று விமர்சிப்பது???...... எப்படியெப்படி எண்ணியெண்ணி நமது அகநிலைகளையும் புறநிலைகளையும் பற்றிய புதிய கருத்தோட்டங்களை வழங்குவது?!?!?!......

(3) நம்பிக்கையும், குருவாணை எதுவானாலும் அதனை உடனே முழுமையாக நிறைவேற்றும் போக்கும்; எதையும் குருவழியே உணர்ந்து செயலாக்கும் மனமும்; எவருக்கும் குருவுக்கேவுரிய மேலாண்மை இடத்தைத் தன்வாழ்வில் தராத தரமும்; எப்படியும் குருவின் திட்டங்களைச் செயலாக்கிடும் திறமும்.........ஒருசேரப் பெற்ற ஊழ்வினைத் தொடர்புத் தோழா! நண்பா! அடியானே! அன்புச் சேவகா!......எந்தப் பீடாதிபதிக்கும் கிடைத்திடாத அளவு மக்கள் தொடர்பு எமக்குக் கிடைத்திடுகின்றது. இதற்குக் காரணம், யாமொருவரே அனைத்து வகையான பாரம்பரியச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், மரபுகளையும், முறைகளையும், நெறிகளையும், விதிகளையும்...... தேவைக்கேற்ப முழுமையாக மாற்றியும், திருத்தியும், மீறியும், உடைத்தெறிந்தும் .......மானுடர்களுக்குள் பீடாதிபதியின் தொடர்பால் அருட் செல்வர்கள், அருட் சோலைகள், அருளூற்றுக்கள்.........தோன்றிடும்வண்ணம் வாழுகிறோம். இதில், எண்ணற்ற தோல்விகள், தொல்லைகள், ஏமாற்றங்கள், அவசரப்படைப்புக்கள், அரைகுறைப் படைப்புக்கள்......என்று எண்ணற்ற வகைகள் உருவாகியுள்ளன. இவையனைத்துமே, எமது வரலாற்றுச் சின்னங்களே! எமது சாதனைகளின் வடிவங்களே! ......ஏனெனில், 'யாம், யாரையுமே எத்த எதிர்பார்ப்புடனும் உருவாக்குவதில்லை.

எனவே, யார், எந்த அளவு உருவானாலும் மகிழ்ச்சியோடு அவர்களை அருளுலகப் பணிகளுக்காகத் தனித்தும், பிறரோடு பிணைத்தும், எம்மோடு இணைத்துமே செயல் படுத்துகிறோம். இதில், எம்மைப் பொறுத்தவரை எதையும் வெற்றியாகப் பெருமிதப் -படவோ! அன்றி, எதையும் தோல்வியாகக் கருதி வருத்தப்படவோ இயலாது. அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பனின் திருவிளையாடலே ......என எண்ணியே நிறைவும் அமைதியும் அடைகிறோம்!

(4) அண்மைக் காலத்தில் நமது இயக்க வரலாற்றில் பிறர் மனம் நோவது பற்றிக்கவலைப்படாமல் விமர்சனம் வழங்கவும்; முடிவுகளை எடுக்கவுமாகச் செயல் படுகிறோம் யாம். இதற்குக் காரணம்; பதினெண் சித்தர் பீடத்தின் சித்தர் நெறி -யான சீவநெறியெனும் இந்துமதம் இந்த மண்ணுலகை விடத்தொன்மையானது; மிகமிகத் தெளிவான ஏட்டறிவையும் பட்டறிவையும் பெற்றது. ஆனால், இவை -யெல்லாம் பழமையானவை; காட்டுமிராண்டிக் காலத்தவை; கரடுமுரடானவை; உலகியலுக்கு அப்பாற்பட்டவை; நடைமுறைக்குச் சிரமமானவை; சாதாரண அறிவு படைத்த சராசரி மனிதரால் புரிந்து கொள்ள முடியாதவை; எல்லோரும் அநுபவத் -தில் கையாள முடியாதவை..... என்ற கருத்து விளக்கங்களை அல்லது திறனாய்வுக் குற்றச்சாட்டுக்களைக் காலங்கள் தோறும் பெற்றிடுகின்றன. குறிப்பாக, ''இறைச்சி -யுணவு உண்ணல்''; ''பலி கொடுத்தல்''; ''வழிபாட்டுக்குரிய கடவுள்களே ஆயுதப் புரட்சியையும் குருதிப் போரையும் பரிந்துரைத்தல்'; ''துறவுநிலை உறவுநிலை மறவு நிலை பற்றிய புரியாமைகள்''; ''பெண்ணுக்குத் தரப்படும் அருளுலக நிலைகள்''; ''சுடலை வழிபாடு, முன்னோர் வழிபாடு, உருவ வழிபாடு......முதலியனவற்றின், அறியாமைகள்';......என்று சிலவற்றைப் பட்டியலிட்டுக் காட்டலாம் — இப்படிப் பட்டனவற்றிற்கு முறையான விளக்கங்களை நிறைவாகத் தரக்கூடிய மாவீரர்களை உருவாக்கியே தீர வேண்டிய கட்டாய நிலையிலேயே உள்ளோம் யாம். எனவேதான் மேற்படி மாவீரர்களை ஏட்டறிவாலும், பட்டறிவாலும், தயாரிப்பதுடன்; அவர்களுக்கு அருளாற்றலை இட்டும் தொட்டும் சுட்டியும் ''குருபாரம்பரிய மரபுப்படி'' வழங்கியும் தயாரிக்கிறோம் யாம். இந்தத் தயாரிப்பு முறைகளில் அவரவர் நம்பிக்கைக் -கும், முயற்சிக்கும், ஆர்வத்துக்கும், செயல் பக்குவத் தரத்திற்கும், திரத்திற்கும் திறத்திற்கும், தீரத்திற்கும் ஏற்ப அவரவர் குறிப்பிட்ட அளவு தேர்ச்சியோடு நின்று விடுகிறார்கள். ஆனால், குறிப்பிட்ட சிலராவது விடாமுயற்சியுடன் தொடர்ந்து குரு வழியாகச் செயல்பட்டு 'மாவீரர்' என்ற நிலையும் கடந்து 'படைத் தளபதிகளாக', 'பட்டாள நாயகங்களாக', 'சேனாதிபதிகளாக', 'மாதண்ட நாயகங்களாக', 'வியூக நாயக்ங்களாக', 'அணி வகுப்பு நாயகங்களாக', 'படை திரட்டு நாயகங்களாக', 'பாடிவீட்டு நாயகங்களாக', 'அருளாட்சி அமைப்பு நிறுவனக் காப்பாளர்களாக', 'அருளாட்சி அமைப்பு நிர்வாகப் பொறுப்பாளர்களாக' ......முதிர்ந்த தேர்ச்சி பெற்று அருளுலகத்தாரின் வாழ்த்துதலையும் ஒப்புதலையும் பெற்று எமது பதிலிகளாகவும், வாரிசுகளாகவும் செயல்படத் தயாராகிடல் வேண்டும். அப்பொழுதுதான், புரட்சி -யைத் தொடர்ந்து நடத்திடவோ, புரட்சியின் வெற்றிக்குப் பிறகு அருளாட்சியை முறைப்படி முயன்று நிறைவாக அமைத்திடவோ முடியும். இவற்றிற்கெல்லாம் மேலாக, நாம் தனிமனித வாழ்வுப் புரட்சி, குடும்ப வாழ்வுப் புரட்சி, சமுதாய வாழ்வுப் புரட்சி, அரசியல் வாழ்வுப் புரட்சி முதலிய அனைத்துமே ஒரு 'முழுமையான -பண்பாட்டுப் புரட்சி' யாகத் [A Total Revolution] தான் செய்யப் போகிறோம் என்பதால்; இப்புரட்சிகளை நிகழ்த்திட எமது வாரிசுகள், பதிலிகள் என்ற தகுதி பெற்றவர் சிலராவது நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் புரட்சிக்குத் தலைமை தாங்கிடல் வேண்டும். அப்பொழுதுதான், தனிமனித வன்முறைகள், தவறுகள், சர்வாதிகாரங் -கள், துரோகங்கள், விரோதங்கள்......முதலியவையெல்லாம் உடனுக்குடன் தடுத்து நிறுத்தப்பட்டிடும். நமது, புரட்சியும் அன்புவழியில், அமைதிவழியில், அறவழியில்,

அருள்வழியில் ஆக்கப்பூர்வமாக ஆக்கங்கள் குன்றுமல் நிகழ்த்தப்பட்டிடும்! நிகழ்த்தப்-பட்டிடும்!! நிகழ்த்தப்பட்டிடும்!!!

(5) நமது வளர்ச்சி; ஒரு சில மாவட்டங்களில் எண்ணியே பார்க்க முடியாத அளவுக்கு மிகமிகப் பெரிய உயரிய வலிய நிலைகளைப் பெற்று விட்டது. இதே நேரத்தில்; சில மாவட்டங்களில் இலைமறைகாயாகவும், அரைகுறையாகவும் வளர்ந்-திருக்கிறது; சில மாவட்டங்களில் மெல்ல மெல்ல மந்தமாகவே வளருகிறது; ஒன்றிரண்டு மாவட்டங்களில் பரவலாகத் தனிக்கனிதர்களின் வளர்ச்சியே நமது இயக்க வளர்ச்சியாக இருக்கின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாக, நம்மிடையில் முன்னணிச் செயல் வீரர்களாக இருப்பவர்களுடையேயே சிலர் பிற்போக்குச் சக்தி-களாகவும், பிளவுச் சக்திகளாகவும், பிரிவினைச் சக்திகளாகவும் குழப்பவாதச் சக்திகளாகவும்: தலைமையின் கீழுள்ள வலிமையான கட்டமைப்புகளையும், இரகசியமான நிறுவன நிர்வாகச் செயல் முறைகளையும்; குருபாரம்பரியச் செயல் திட்டங்களையும்........தங்களின் அறியாமையால் சீர்குலைப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இவற்றால், வானுற வளர்ந்துவிட்ட நமது இயக்க நிறுவன நிர்வாகங்-கள் ஆங்காங்கே மங்கியும், மயங்கியும், தயங்கியும், தேங்கியும்.....பல்வேறு வகை-யான பாதிப்புகளைப் பெற்றுள்ளன. எனவே, இதற்காக என்னென்ன பரிகாரங்-களைச் செய்ய வேண்டுமென்று சத்தி அண்டத்துத் தேவதேவியின் பரிந்துரையைக் கேட்டே; அவசர அவசிய அஞ்சல்களால் செயல் விளக்கங்களும் குருவாணைகளும் வழங்கப்பட்டுவருகின்றன. எனவே, நம்மவர்கள், எந்தப் புதிய கருத்துக்களாலும், திருத்தங்களாலும் வருத்தமடையாமல் செயல்படல் வேண்டும்.

நம்மவர்கள். குறிப்பிட்ட காலம் வரை அவரவரின் சித்திக்காகப் பூசைகளை வீட்டிலும், அருட்கோட்டங்களிலும். ஆலயங்களிலும், கோயில்களிலும், சுடலைகளிலும், புதைகாடுகளிலும் தங்களின் குடும்பத்தாருடன் செய்தால் போதும், எனவே, எக்காரணம் பற்றியும் தலைமைப்பீடத்தின் ஒப்புதலின்றி நம்மவர்களில் யாரும் அடுத்தவருடைய வீட்டிற்குப் போகத் தேவையில்லை. மேலும், நம்மவர்கள், பொது இடங்களில் கூடித் திண்ணைப் பேச்சில் காலத்தை வீணாக்கத் தேவையில்லை. அச்சிட்ட வெளியீடுகளையும், கையெழுத்துப் பிறதிகளையும்; அவ்வப்போது வரக் கூடிய அஞ்சல்களையும் மட்டும் படிப்பதற்காகவே நம்மவர்கள் கூடிடலாம். வேறு ஐயங்களுக்கு அவரவர் நேரடியாகத் தலைமைப் பீடத்துடன்தான் தொடர்பு கொள்ள வேண்டும். குருவாணை.

அன்பு,

**குருமகாசன்னிதானம், ஞாலகுருசித்தர் அரசயோகிக்கருவூரு**

---

**பழனிக்குக் கால்நடைப்பயணம் பத்தி இயக்கப் போர்க்கோலமே**

மதவுணர்ச்சியின் விழிச்சியே இந்த விழிச்சிமிக்க பழனிக் கால்நடைப்பயண நிகழ்ச்சி! தமிழகம் முழுதுமுள்ள மக்களிடையில் நாத்திகம்! கடவுள் மறுப்பு! புராண எதிர்ப்பு! மத எதிர்ப்பு! இனமொழித் துரோகப் பகுத்தறிவு வெறுமை......என்பன நலிந்து மெலிந்து அழிந்திட்ட வெற்றிவிழாவே பழனிக்குக் கால் நடையாகச் செல்லும் பயணம். பதினெண் சித்தர்களின் 'சித்தர் நெறி' எனும் ''சிவ நெறி'' யான மெய்யான இந்துமதக் காலக்கணக்கீட்டுப்படி; இன்றைக்குச், [26—1—1988 க்கு] சரியாக 43,73,089 ஆண்டுகளுக்கு முன்னால்; அனாதிக்காலத்தில் வாழ்ந்திட்ட பழனியை ஆண்ட அனாதிகாலப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளில் ஒருவர் வெட்டவெளிக் கருவறை கொண்டருளு தேவராகப் பழனிமலை மீது நின்ற அருட்கோலமே பழனியாண்டவர் திருக்கோலம். இந்த அனாதிகாலப் பீடாதிபதியின் மீது மக்களுக்குப் பத்தியீடுபாடு அதிகமாகும்போதே மதமறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், மதஆட்சி மீட்சியும் விளையும் — ''

—குருபாரம்பரியம்

---

1988-ஆம் ஆண்டிற்கான சந்தா ரூ 36—00 அனுப்பவும்.

# தமிழருக்கு மட்டும் தாழ்ச்சியேன்?!?!?!

(1) இம் மண்ணுலகிலுள்ள எல்லா இனத்தவர்களும் வரலாற்றுப் போக்கிலே உயர்ச்சியையும், தாழ்ச்சியையும்; வெற்றியையும் தோல்வியையும் உரிமை வாழ்வையும், அடிமை வாழ்வையும்;........மாறி மாறித்தான் பெற்றுள்ளார்கள். ஆனால், இந்தத் தமிழர்கள் மட்டுமே ஒட்டுமொத்தமாகப் பெற்றிட்ட மிகப் பெரிய சமய சமுதாய வீழ்ச்சியிலிருந்து மீட்சியே பெறவில்லை; உயர்ச்சியே அடையவில்லை. ஆனால், இவர்களுக்கிடையில் குறிப்பிட்ட வட்டாரத்தார் மட்டுமே [தென்மண்டலத்தார், வடமண்டலத்தார்,தொண்டைமண்டலத்தார்,கீழைப் புலத்தார், மேலைப்புலத்தார் நடு நாட்டார், மலைநாட்டார், பேரியாற்ரூர், வைகையாற்ரூர், காவிரியாற்ரூர், வேகவதியாற்ரூர்...] குறிப்பிட்ட சிலகாலம் மற்ற வட்டாரத்தார்களை அரசியலால் அடக்கியாண்டு உயர்ச்சியும், உரிமையும் பெற்று வெற்றி வாழ்வு வாழ்ந்ததாகத் தெரிகின்றது. இதைத்தவிரத் தமிழர்கள் ஒட்டுமொத்தமாக அரசியலில் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் பெற்று முயன்று மிகப் பெரிய வெற்றிகளைப் பெற்று உயர்ச்சியையும் உரிமை வாழ்வையும் நெடுங்காலம் அடைந்திருந்ததாகத் தெரியவில்லை. சங்க காலத் தனியரசுகள், பிற்காலச் சோழப் பேரரசு, பிற்காலப் பாண்டியப் பேரரசு......என்று விரல்விட்டு எண்ணக் கூடியவைதான் தமிழரின் அரசியல் வெற்றிக்குச் சான்ருக இருக்கின்றன. அதுவும் இந்த ஒருசில தமிழினப் பேரரசுகளின் காலத்திலும தமிழ்மொழி; மதத்துறையில் உரிமையையும் பெருமையையும இழந்து தீண்டாமை நிலையையே பெற்றிருந்தது. அதாவது, தமிழினப் பேரரசுகளின் காலங்களிலும் சமசுக்கிருதம்தான் மதத்துறையில் ஆட்சியும் உயர்ச்சியும் உரிமையும் பெருமையும் பெற்று விளங்கிடும் மொழியாக இருந்திட்டது.

(2) ''......கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழித்தே; இமயமலைக் கணவாய்கள் வழியாக ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு; தோலாலான கோவணமும், தோலும், குடுவையும், குடுமியுமாகப் பால்வண்ணப் பழுப்பு மேனிக் கூட்டத்தார் இந்துமத அருளாளர்கள் கொலுவிருந்த இமயமலையின் மடிப் பகுதிகளுக்கும், அடிப்பகுதிகளுக்கும், ஆற்றங்கரைப் பகுதிகளுக்கும் வந்தனர். இவர்களுடைய பெண்டிர்களின் அழகும், பல்வேறு வகையான ஆட்டம், பாட்டு, கூத்து, விளையாட்டு முதலியவைகளும் இவர்களை எங்கும் வரவேற்புப் பெறவும், வாழ்வுறவும் செய்தன. இவர்களால் கிடைத்த பால், வெண்ணை......முதலிய பொருள்களுக்காகவும்; இவர்களுடைய ஆண்களின் பணிவான உழைப்பையும் பெரிதும் விரும்பிய இந்து(சிந்து). யமுனை, கங்கை......முதலிய ஆற்றங்கரைச் சிற்றரசர்களும், பேரரசர்களும், பொதுமக்களும் இவர்களை விரும்பி ஏற்றுக் கொண்டிட்டார்கள். ஆனால், சூழ்ச்சித்திறமும் இனக்கட்டுப்பாடும், எதையும் தியாகம் செய்து வாழத் தெரிந்த பண்பும்...உடைய இவர்கள் விரைந்து அரசகுடும்பத்தார்கள் முதல் ஆண்டிகளின் கூட்டம் வரை ஊடுருவல் செய்து செல்வாக்கான நிலையான வாழ்வைப் பெற்று விட்டார்கள். இவர்கள் எப்போதுமே 'கண்கொத்திப் பாம்பு போல்' எதிரிகளை அழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள். இவர்கள், எங்கிருந்தாலும் சரி, அங்குள்ளவர்களுக்கிடையில் பிரிவும், பகையும், வேற்றுமையும், வேறுபாடும், போட்டியும், பொருமையும்......அருகம்புல் போல் பசுமையாக முளைத்துக் கொண்டே இருக்குமாறு செய்திடுவார்கள். இதே நேரத்தில் இவர்கள் ஆயிரமாயிரம் கல் தொலைவு பிரிந்திருக்கக கூடிய தங்களது வட ஆரிய இனத்தவர்களுடனெல்லாம் நெருங்கிய அந்தரங்கமான உறவை வளமாகவும்

வலிவாகவும் பசுமையாகவும் வளர்த்துக் கொண்டே இருப்பார்கள். அதனால்' இவர்கள், தங்களுடைய இனத்தவரில் யாருக்கேனும் ஊசிமுனையளவு பாதிப்பு ஏற்பட்டால் கூட உடனே கடல்போல் சீறியெழுந்து விரைந்து முழுமையாகச் செயல்பட்டுப் பாதுகாப்பு வழங்கிடுவார்கள். இப்படிப்பட்ட இவர்கள் தெய்வீகத் தமிழகத்தையே தங்களின் நாற்றங்காலாகவும், தலைமைப்பீடமாகவும் ஆக்கிக் கொண்டு விட்டார்கள். எனவேதான், தமிழருக்கு மட்டும் தாழ்ச்சி என்னென்றும் இருந்து கொண்டுதானிருக்கும். எனவே, இந்தப் பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வட ஆரியர்களைத் திருத்தித் தமிழர்களோடு எல்லா வகையிலும், நிலை -யிலும் இரண்டறக் கலந்திடும்படி செய்திடலே சிறந்த செயலாகத் தெரிகிறது. இதற்கு அவர்களின் சமசுக்கிருத மொழி வெறி, வேதமத வெறி, இன வெறி...... முதலியவைகள் முழுமையாக அகற்றப்படல் வேண்டும். அது இயலுமா? இதற்காக அ நல்வழியில் அமைதியாக முயலுவது தோற்குமேயானல்; மாபெரும் சமய சமுதாய அரசியல் போர்களே நிகழ்ந்து குருதி மழை பெய்துதான் தமிழினப் பயிர் செழிக்க நேரிட்டிடும். இதனைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட வேண்டியவர்கள்தான் தமிழினத்தின் தலைவர்கள், குரு, குருமார், குருக்கள், பூசாறி, குருதேவர்...... முதலானோர்கள் ..''— தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் குருபாரம்பரிய வாசகம். இதே வாசகம் 'அரசபாரம்பரியம்', 'இலக்கிய பாரம்பரியம்', எனும் இரண்டிலும் பலமுறை திருப்பத்திருப்ப இவரா -லேயே எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வாசகத்தின் பொருளுக்கு முன்னோடியாக, இதே கருத்துடைய குருபாரம்பரிய, அரசபாரம்பரிய, இலக்கிய பாரம்பரிய வாசகங் -கள் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் அவர்களால் எழுதப் பட்டுள்ளன.

குறிப்பு:- இப்படிப் பத்தாவது பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகள் 'தமிழருக்கு மட்டும் தாழ்ச்சியேன்?' என்ற கருத்தோட்டத்தில் வழங்கியுள்ள அநுபவப்பூர்வமான, ஆராய்ச்சிப் பூர்வமான கருத்துக்கள்; இவர்களின் 'குருபாரம் -பரியம்', 'அரச பாரம்பரியம்', 'இலக்கியப் பாரம்பரியம்' எனும் மூன்று மாபெரும் நூல்களிலும் தெளிவாகத் திரும்பத் திரும்பப் பலமுறை வலியுறுத்தி எழுதப்பட்டிருக் கின்றன. எனவே, இம்மூன்று நூல்களும்இந்த இருபதாம் நூற்றாண்டின் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் தலைவர்கள் அனைவருமே ஏறத்தாழத் 'தமிழி -னத் தாழ்ச்சிகளை' அகற்றிட எடுத்திட்ட முயற்சிகளில் மாபெரும் தோல்விகளையே பெற்றுள்ளதற்குரிய அடிப்படைக்காரணத்தைத் தெளிவாக்குகின்றன. இவற்றின -டிப்படையிலேயே சிந்தித்துத்தான்; யாம், சித்தர் காகபுசுண்டர் எனப்படும் காக்கா வழியன் பண்ணையாடி சித்தர்காக்கையர் ம.பழனிச்சாமிபிள்ளை [முடிகணம் (முடிகண்ட சோழபுரம்) கரூர் வட்டம் திருச்சி மாவட்டம்] தமிழினம் பற்றிய பேருண்மைகளை விளக்குகிறோம். எனவே, இங்கு தமிழர்பற்றிக் கூறுவதுதான் உடனடித் தேவை.

தமிழ —> தமிள —> திமிள —> திமிர —> திராவிட...... என்று 'திராவிட' என்ற சொல் பிறந்தது. இச்சொல், தமிழினத்தையும்; இதிலிருந்து பிறந்த மலையாள தெலுங்கு, கன்னட, துளுவ...... எனப் பட்டியலிடப்படும் இந்திய மொழிகள் அனைத்துக்குமுரிய மக்களைக் குறிக்கும். அதாவது, இன்றுள்ள இந்தியர்கள், இந்த இந்தியா (= இந்து மத நாடு) தோன்றுவதற்கு முன்னரேயே இன்றுள்ள தென்னிந்

-தியாவோடு இணைந்து இந்துமாக் கடலில் இருந்த இளமுறியாக் [இளமை மாறுத நிலப்பகுதிகளை மிகுதியாக உடையது - Loose Soil —> சதுப்பு மண், பொய் மண், கண்டத்து வாழ்ந்த தமிழினத்தவரே யாவர். மூன்று முறை நெடிய இடைவெளிகளுக் -கொரு முறையாக நிகழ்ந்த கடல் கோள்களால் இளமுறியாக் கண்டத்தின் முக்கால் பகுதிக்கு மேல் சிதைந்து போயிற்று. எனவேதான், அங்கு வாழ்ந்த இம்மண்ணுல -கின் முதல் இனமான தமிழினத்தவர் இன்றுள்ள உலகின் எல்லாப் பகுதிகளிலும் மூல இனத்தவராக, முதல் இனத்தவராக, தாயினத்தவராக வாழுகின்றனர். இந்த இளமுறியாக் கண்டத்தின் சிதைந்த பகுதிகளில் அந்தமான், இலட்சத் தீவுகள், இலங்கை, சாவா, சுமத்திரா, பார்மோசா, பிலிப்பைன்சு... முதலிய பல தீவுகளும், ஆப்பிரிக்க அமெரிக்க நாட்டுக் கடலோரப் பகுதிகளும், இன்றைய தென்னிந்தியாவும் குறிப்பிடத்தக்க அளவு தமிழினத்தவர் மிகுதியாக உள்ள இடங் -களாகும். இந்தத் தென்னிந்தியப் பகுதித் தமிழர்களே; இன்றுள்ள இந்தியர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்த அன்னியர்களின் கலப்பால் உருவானவர்களைத் தவிர ஏறத்தாழ எல்லா இந்தியர்களும், பழங்குடியினரும், மலைவாசிகளும், தமிழினத்தின் எல்லாப் பண்புகளையும், நாகரீகக் கூறுகளையும், தோற்றப் பொலிவுகளையுமே பெற் -றுள்ளார்கள். மேலும், இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளும் திராவிட மொழிகளே! அதாவது தமிழ் மொழியிலிருந்து தோன்றியவைதான் இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளும். எனவேதான், இந்தியர்களின் மூலமும் தாயகமும் தமிழ்நாடுதான்; இந்தியாவின் மதமான இந்துமதத்தின் பிறப்பிடமும், இருப்பிடமும், இன்றுவரை வளர்ப்பிடமும் காப்பிடமும் தமிழகம்தான் என்ற இயற்கை நிலையே தெளிவாக இருக்கின்றது...... இப்படித் தமிழர்கள் பற்றிய ஒருசில பேருண்மைகளையாவது ஒவ்வொரு கட்டுரையிலும், நூலிலும், உரைகளிலும்... வழங்குவதன் மூலம்தான்; தமிழினத்தாருக்கு இனமான உணர்வு, இனப்பற்றுணர்வு, இன ஒற்றுமையுணர்வு, இன ஒருமைப்பாட்டுணர்வு, தன்னம்பிக்கையுணர்வு, மொழியுரிமையுணர்வு, மொழி பற்றுணர்வு மொழி விடுதலை பேணும் உணர்வு... முதலியவை முளைத்துக் கிளைத்துத் தழைத்துச் செழித்து வளர்ந்து கொழுத்த பயனை நல்கிடும் நல்கிடும் நல்கிடும்.

தமிழர்களின் மறுமலர்ச்சிக்காக, வளவளர்ச்சிக்காக இன உணர்ச்சியை விழிச்சியும் எழுச்சியும் செழிச்சியும் அடையச் செய்தல் வேண்டும். ஆனால், அதற்காக மாற்று இனத்தாரைச் செர்மானியச் சர்வாதிகாரி இட்லர் யூத இனத்தவரை அழிக்க முயன்றது போல் தமிழகத்திலுள்ள பிற இனத்தாரை அழிக்க முயன்றால்; அம் முயற்சி எதில் போய் முடியுமென்றே கூற முடியாது தமிழர்களிலேயே பாதிக்குமேல் பிற இனத்தவரின் அடிமைகளாக, தொண்டர்களாக பத்தர்களாக, விருப்பாளர் -களாக, நம்பிக்கையாளர்களாக, ஆதரவாளர்களாகத்தான் இருக்கிறார்கள். எனவே, எத்தகைய மாபெரும் படை தயாரானாலும் சரி; தமிழகத்தைப் பொறுத்த வரை தமிழரல்லாத மற்ற இனத்தின் எதிர்ப்பைச் சமாளிப்பதை விட; அப்பாவித்தனமாக -வும், ஏமாளித்தனமாகவும்......தமிழர்களிலேயே கணிசமான அளவினர் பிற இனப் பாதுகாவலர்களாக மாறி விரோதச் செயல்களையும் துரோகச் செயல்களையும் செய் -திட்டால்......அவற்றைச் சமாளிப்பதுதான் சிரமம், எனவேதான் ‘கருத்துப் புரட்சி’ ‘எண்ணப்புரட்சி’, ‘சிந்தனைப்புரட்சி’ ‘கலைவழியாகத் தமிழின மறுமலர்ச்சி’...... முதலிய பணிகளைச் செய்வதோடு; தமிழர்கள், பிற இனத்தாரை வென்று அடக்கித் தன்மானத்தோடும், தன்னம்பிக்கையோடும் துணிந்து வாழத்தயாராகும்படி செய்தல் வேண்டும், இத்துடன். எல்லா இனத்தவரையும் இனக்கலப்பால் தமிழராக்க வேண்டும் அத்துடன், பிற மதத்துக்குச் சென்றவர்கள்; தங்களை, அம்மதத்துக்கு

உரிய அன்னிய இனத்தவராகவே எண்ணிடும் நிலைகளையும் மாற்றியமைக்கக் கருத்துப் புரட்சியைச் செய்தல் வேண்டும்.

(5) தமிழர்களுடைய மதம்தான் இந்துமதம். அதுவும், 'இந்துமதம்' என்பது தமிழரின் அகப்பண்பாட்டையும், புற நாகரீகத்தையும் உள்ளீடாகக் கொண்டு உருவான ஒன்றுதான்' என்ற கருத்தினை வேற்று மதங்களுக்கு மாறிய தமிழர்களுக்கு அறிவித்தேயாக வேண்டும்; நன்கு புரிவித்தேயாக வேண்டும். இதில் கிடைக்கும் வெற்றியின் அளவைப் பொறுத்ததுதான் தமிழின மறுமலர்ச்சிப் பணி; தமிழ்மொழி -யின் விடுதலைப் பணி; தமிழின விடுதலைப் பணி அல்லது உரிமை மீட்சிப் பணி...... முதலியவைகளின் வெற்றியின் அளவு அமைந்திடும்! அமைந்திடும்! அமைந்திடும்! எனவே, தமிழர்களுக்கிடையில் மதப் போராட்டங்களோ! சாதிச் சண்டைகளோ! இல்லாமல் மொழிப்பற்றும் இனப்பற்றும் வளர்க்கப்பட்டாக வேண்டும்! வளர்க்கப் பட்டாக வேண்டும்!! வளர்க்கப்பட்டாக வேண்டும்!!!......அதுவே இந்து மறுமலர்ச்சி இயக்கத்துக்கும், இதன் கீழுள்ள அருட்பணி விரிவாக்கத் திட்டம் உள்ளிட்ட நாற்பத்தெட்டு நிறுவன நிர்வாகங்களுக்கும் உயிர் மூச்சாகவும் செயல்திட்டச் சித்தாந்தமாகவும் இருந்திடல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழர்க்கு மட்டும் தாழ்ச்சி நிலை தொடர்ந்திடும் இழிநிலையும் பழிநிலையும் அழித்தொழிக்கப் பட்டிடும்.

(6) அருளுலகத்தின் விதைமுதலாக உருவாக்கப்பட்ட தமிழர்களுக்கு மட்டும் தாழ்ச்சி நிலை தொடர்ந்து இருப்பதற்குக் காரணம்; அவர்களுக்கு இன உணர்வும் மொழி உணர்வும், தன்மான உணர்வும், தன்னம்பிக்கையுணர்வும் நலிந்து மெலிந்து மெலிந்து வலுவிழந்து நோயுற்ற நிலை இருப்பதுதான் எனவே, யார் தமிழரின் மறுமலர்ச்சிக்காக அல்லது வளவளர்ச்சிக்காகப் பாடுபட முன்வந்தாலும் சரி; அவர் -கள் முதலில் தமிழரின் நோய்நிலைகளையும், நலிவுமெலிவு நிலைகளையும், தேக்க வீக்க முடக்க அடக்க நிலைகளையும்......நன்கு ஆராய்ந்தறிந்து புரிந்து தெளிந்திடல் வேண்டும். அப்பொழுதுதான், என்னென்ன வழிகளில் தமிழர்களுக்கு அகவொளியும், வலிவும், தெளிவும், நம்பிக்கையும், விழிச்சியும், செழிச்சியும்......ஏற்படுமாறு செய்ய வேண்டுமென்று கூட்டுச் சிந்தனைகளால் நல்ல பல செயல்திட்டங்களும் பிறந்தால் தான் இளைய தலைமுறையினராவது சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய, தொழில் துறைகள் அனைத்தையும் தமிழர்க்கே உரியதாக்கிட முடியும். அதனால், தமிழர்கள் தங்களுடைய தாயகத்திலாவது தன்னம்பிக்கையுடனும், தன்மானத்துடனும் உரிமையுடனும், பெருமையுடனும், இனப்பற்றுடனும், ஒற்றுமையுடனும், கட்டுக் கோப்புடனும் மொழியுணர்வுடனும் விடுதலை வாழ்வு வாழுகின்றவர்களாக மாறிட முடியும். இல்லாவிட்டால், அன்னியநாடுகளிலும் பிற மாநிலங்களிலும் அடிமைப் பட்டு மானமிழந்து கூலியாய்ப் போலியாய் வாழும் தமிழர்களைப் போலவே தாய் நாட்டில் வாழும் தமிழர்களும் மானமிழந்து, உரிமையிழந்து, அடிமைப்பட்டுக் கங்காணியாய், கூலியாய், எடுபிடியாய்ப் போலி வாழ்க்கையே வாழ நேரிட்டிடும். இவற்றையெல்லாம் பெரும்பாலும் நன்கு புரிந்த தமிழர்களே தலைவர்களாக உலா வரும் பொற்காலமும் இக்காலம்தான். ஆனால், இந்தத் தலைவர்களும் பதவியாசை, பண ஆசை, புகழாசை, சுயநல நெறி.........முதலியவைகளால் அன்னியர்களின் கையாட்களாகவும், கங்காணிகளாகவும் மாறித் தமிழர்களை மேலும் மேலும் அடிமை -களாக்கி வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சியுறுமாறுதான் செய்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டுத் தலைவர்களைப் பற்றிய முறையான ஆராய்ச்சிகள் தேவை!

[தொடர்ச்சி 4-ஆம் பக்கம்]

1988-ஆம் ஆண்டிற்கான சந்தா ரூ 36 00 அனுப்பவும்

# உண்மையிலே இந்துமதத்தில் வீழ்ச்சி நிலையா?

## இந்து மதம் வீழ்ச்சி! எழுச்சி! செழிச்சி பெற்றிடுமா!?!?!
## தமிழின மொழி விடுதலையே இந்து மதவிடுதலை

## மதமறுமலர்ச்சியே சமுதாய அரசியல் புரட்சிகளை நிகழ்த்தும்

## மதவாதிகளின் இலக்கிய வரலாற்றறிவே விடுதலைப் போராயுதங்கள்

## கல்வியறிவும் கேள்வியறிவுமே மதவாதிகளின் கண்கள்!

## இப்படிக் குருபாரம்பரியத்தில் விளக்கங்களும் விடைகளும் நிறைய உள்ளன..... இவற்றால் பிறந்த சிந்தனை

(1) 'மதம்' என்றாலேயே வளத்தின் மிகுதி! வலிமையின் உச்ச நிலை! மானுட ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டது!......என்ற பொருள் தெளிவாகிறது.

(2) 'இந்து' என்றாலேயே அனைத்துக்கும் ஆரம்பம், மூலம், கரு, தாய், தொன்மையானது பழமையானது, உயரியது, அரியது, பெரியது சிறந்தது. அழியாதது....என்ற எண்ணற்ற பொருள்கள் புரிகின்றன, விளக்கமாகின்றன; நினைவுக்கு வருகின்றன.

(3) 'தமிழிலக்கியங்கள்' என்றாலேயே இந்த மண்ணுலகம், விண், வான், ஆகாயம், பரவெளி, பாழ்வெளி, மூற்பிறப்பு, ஆவி, ஆன்மா, ஆருயிர் முதலிய அனைத்துக்குமே விளக்கம் தரக்கூடியன என்ற உணர்வு வருகிறது.

[4] இத்தகைய சிறப்பு மிக்க தமிழகத்திலே எல்லாக் கோயில்களிலுமே பூசை நேரங்களில் கூட்டம் நிரம்பி வழிகின்றது; பொதுவாகத் தமிழக மக்கள் தனிமனிதர் கொண்டாடும் 'நோன்புகள்', நிகழ்த்தும் 'சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகள்'; குடும்பத்தார் கொண்டாடும் 'திருநாள்கள்'; சமுதாய அளவில் கொண்டாடிடும் 'திருவிழாக்கள்' ...முதலிய அனைத்தையுமே நம்பிக்கையோடும் விருப்பத்தோடும் பற்றோடும் பாசத்தோடும்; உறவினரோடும் ஊராரோடும் கூடிக் குலாவிக் குதூகலித்துத்தான் கொண்டாடுகிறார்கள். ஆனால், ஏறத்தாழப் பெரும்பாலானவர்களுக்கு நமது மதத் தத்துவங்கள், செயல் சித்தாந்தங்கள், வரலாறுகள், இலக்கியங்கள், மதப்பெரியார்களின் சாதனைகள் போதனைகள்......முழுமையாகவே தெரியாத நிலைதான் இருக்கிறது. மீதமுள்ள சிறுபான்மையினருக்கும் மேற்படிச் செய்திகள் அரைகுறையாகத்தான் தெரிந்திருக்கின்றன. எனவே தான், நமது மதத்தின் மலர்ச்சி நிலை, வளர்ச்சி நிலை, பயிற்சி நிலை, செழிச்சி நிலை.........முதலிய அனைத்துமே தளர்ச்சியுற்றுக்கிடக்கின்றன. இவற்றையெல்லாம் போக்குவதற்காகத்தான், இன்றைக்கு 'மத மறுமலர்ச்சி இயக்கம்', 'மதச்சீர்திருத்த இயக்கம்'.....முதலியவை தேவைப்பட்டுள்ளன.

[5] நம்மவர்கள் பூசைப் பொருள்களும் படையல் பொருள்களும் எடுத்துக் கொண்டு மட்டும் கோயில்களுக்குச் செல்வதுமாறி; எல்லோருமே, கையில் புத்தகத்துடன் செல்லுகின்ற காலம் வர வேண்டும். கோயில்களில் பூசாறி.....முதலாக உள்ள நாற்பத்தெட்டு வகையான ஊழியக்காரர்களும் கோயிலில் நடைபெறும் [1] விரிவுரை, [2] அருளுரை, [3] சொற்பொழிவு, [4] பட்டிமன்றம், [5] கருத்துவிளக்க வாதம், [6] பூசாமொழி ஓதுவித்தல்..... முதலியவற்றில் பங்கு பெற்றிடல் வேண்டும் அதனால், மத அறிவு [Religions Knowledge] உடையவர்களாக அனைத்து வகையான கோயில் ஊழியர்களும் தயாராகிடுவார்கள் அதனால், கோயில் வழிபாட்டுக் கூடமாக மட்டும் செயல்பட்டிடாமல்; அறிவு வளர்க்கும் ஞானப்பள்ளியாகவும் தயாராகிடும். அப்பொழுதுதான், மதமே குடும்பமாகிடும், சமுதாயமாகிடும், அரசியலாகிடும்; அதன் பயனாக எதிர்பார்த்திடும் மத மறுமலர்ச்சி, மத வளர்ச்சி, மத ஆட்சி மீட்சி .....முதலியவை உருவாகிடும்.

**தத்துவ நாயகம், அருளாட்சி நாயகம்,**
**தமிழினக் குருபீடம் இந்து மத ஆச்சாரியார்,**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**

KVS கருவூர் அச்சகம், தேரடி தெரு, பொன்னேரி.